"விடுதலை"
சந்தா விகிதம்
(முன் பணமாக)

தனிப்பிரதி 1 அணா

இந்தியா சந்தா விகிதம்

		ரூ. அ.
1	மாதம்	2—15
3	மாதம்	6—25
6	மாதம்	12—00
12	மாதம்	24...00
வெளிநாடு		
6	மாதம்	15—00
12	மாதம்	30—00

RECD. NO: M. 4789.
PHONE NO. 86977.

திராவிட நாடு திராவிடருக்கே

விடுதலை

VIDUTHALAI
ESTD: 1935.

திராவிடர் தமிழ்த் தினசரி

4 பக்கம் விலை 1 அணா
இலங்கையில் 10 சதம்

பெரியார் பொன்மொழி

"திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தனி மனிதனுக்கு எப்போதுமுதல் தோன்றியிருக்க முடியும்?" என்று சிந்தித்துப்பார்த்தால், தனி உடைமைத் தத்துவம் தான் திருமணத்திற்கு அஸ்திவாரமானது என்பது நன்றாக விளங்கும். வியாபாரமே இல்லாத காலத்தில் கூட்டுவியாபாரம் எப்படி நடந்திருக்க முடியும்?"

மலர் 20 | சென்னை விளம்பி ஆண்டு மாசி 19 உ (3—3—59) செவ்வாய் | வெளியூர்: விளம்பி ஆண்டு மாசி 20 உ (4—3—59) புதன் | இதழ் 263

தமிழக சர்க்கார் 1959-60ம் ஆண்டு வரவு-செலவுத்திட்டம்

ரூ. 139 லட்சம் உபரி எதிர்பார்ப்பதாக நிதியமைச்சர் அறிவிப்பு

புதிய வரிகளுமில்லை; இருக்கிற வரிகளில் அதிகரிப்புமில்லை

சென்னை, மார்ச் 3—

1959—60ம் ஆண்டுக்குரிய உபரி வரவு செலவு திட்டத்தை நிதியமைச்சர் திரு. சுப்ரமணியம் நேற்று சென்னை சட்டமன்றத்தில் வெளியிட்டார். ரூ 139 லட்சம் உபரியாயிருப்பதாக அறிவித்தார்.

1959—60 ஆம் ஆண்டில் சென்னை அரசாங்கம் ரூ 6 கோடி பொதுமக்களிடம் கடன்வாங்க எண்ணியிருப்பதாக அறிவித்தார்.

உபரியாக உள்ள இந்த 135 லட்சம் ரூபாயும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்க இருக்கும் உயர்வு ரூ 5க்கு அநேகமாக ஈடுபட்டுவிடும் என்றார்,

இவ்வளவு செலவு திட்டத்தில் புதிய வரிகளுமில்லை, உள்ள வரிகளில் உயர்வுமில்லை,

உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கும் என். ஜி ஓ.க்கள் பிள்ளைகள் அனுபவித்துவரும் சலுகைகளை கிராமாதிகாரிகள் பிள்ளைகளுக்கும் வழங்க உத்தேசித்திருப்பதாகவும் அமைச்சர் அறிவித்தார்,

வரவு செலவுத் திட்டத்தை வாசிக்க 60 நிமிட நேரம் பிடித்தது. இந்த ஆண்டில் தமிழிலே பட்ஜெட் அளிக்கப்பட்டது.

1958—59ம் ஆண்டு வரவு செலவு மதிப்பீடுகளில் ரூ 15 லட்சம் உபரி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டதற்குப் பதில், ரூ. 265 லட்சம் உபரியாகிறதுப் என எதிர்பார்க்கலாம் என்று அமைச்சர் தமது உரையில்குறிப்பிட்டார் மேலும்கூறியதாவது:

1958-59ம் வரவு செலவுதிட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பொழுது யூனியன் அரசாங்கத்திடம் நாம் கடன்வாங்கியிருக்கும் தொகைகளின்பேரில் செலுத்தப்படவேண்டிய வட்டி விகிதத்தைப்பற்றி நிதிக்கமிஷன் சிபாரிசுகளை மத்திய அரசாங்கம் ஒத்துக்கொள்ளாமல் இருந்தார்கள் அந்தசிபாரிசுகள்சிலமாறுதல்களுடன் யூனியன் அரசாங்கத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன அதன்படி ஆண்டு ஒன்றுக்கு ரூ 50 லட்சம் நமக்கு மீதமாகும் இதை 1958-59ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டிலும் 1959-60 ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திலும் கணக்கில்எடுத்துக் கொண்டுள்ளோம்,

1958 59ம் ஆண்டில் மூலதனச் செலவு ரூ 9·73 லட்சமாக இருக்கும். என்று மதிப்பிட்டிருந்தோம் ஆனால் அது 13·07 லட்சத்திற்கு உயர்ந்திருக்கிறது. முக்கியமான நீர்ப்பாசன திட்டசெலவுகளில்

ரூ 1·04 லட்சமும் தொழில் அபிவிருத்திக்கான திட்டச்செலவுகளில் ரூ 48 லட்சமும் அதிகமாகியிருக்கிறது மின்சார அபிவிருத்தித் திட்டங்களுக்கான செலவையும் மின்சார போர்டே இப்போது ஏற்றுக்கொள்கிறது அதற்காக மின்சார போர்டுக்கு மாநிலத்திலிருந்து ரூ 10·10 லட்சம்கடனாகக்கொடுத்திருக்கிறோம் மின்சார அபிவிருத்தித் திட்டங்களுக்கு இவ்வாண்டு ரூ 14·03 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு மின்சாரபோர்டு பொதுமக்களிடமிருந்து ரூ 2·20 லட்சம் கடன் எழுப்பியிருக்கிறது.

சென்னை அரசின் (1959-60) வரவுசெலவு கண்ணோட்டம்

வரவு	ரூ.	73 கோடியே 8-லட்சம்
செலவு	ரூ	71 கோடியே 69 லட்சம்
மிச்சம்	ரூ.	1 கோடியே 39 லட்சம்

பொதுவாக நடப்பு ஆண்டில் நிதிவசதியில் எவ்வித நெருக்கடியும் ஏற்படாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1959-60ம் ஆண்டு ரூ 90 லட்சம் ரொக்க இருப்புடனும் யூனியன் அரசாங்க குறுகியகாலக் கடன் பத்திரங்களில் ரூ 200 லட்சத்துடனும் தொடங்கலாம்.

1959-60 ஆண்டில் ரூ. 7308 லட்சம் வருவாயும் ரூ 7169 லட்சம் செலவும் ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டைவிட வருவாய் ரூ. 560 லட்சம் அளவிற்கும் ரூ. 485 லட்சம் அளவிற்கும் அதிகரித்திருக்கின்றன, இந்த அதிகரிப்பு பல்வேறு இனங்களில் ஏற்பட்டிருக்கிறது. இதற்கான விளக்கத்தை பட்ஜெட் அறிக்கைக் குறிப்பில் காணலாம். ரூ. 139 லட்சம் உபரி ஏற்படலாம் என்று கணக்கிடப்பட்டிருந்தாலும் சமீபத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரணத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்வோமேயானால் இந்த உபரி முழுதும் அநேகமாகக் கலைந்து விடும். மாறி

1959-60ம் ஆண்டில் கட்டளைக் கால்வாய் திட்டத்துக்கு ரூ. 77 லட்சமும் புள்ளம்பாடிக்கு ரூ. 58 லட்சமும் பரம்பிக்குளம் திட்டத்திற்கு ரூ. 45 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்துறை மேற்படிப்பு

மேற்குஜெர்மனியின் உபகாரச் சம்பளம்

புதடில்லி பிப் 28—

மேற்குஜெர்மன் சமஷ்டிக் குடியரசு மேற்குஜெர்மன் சர்வகலாசாலைகளில் பொருளாதாரத்துறையில் [அதாவது அரசியல் பொருளாதாரம் தொழில்கள் நிர்வாகம் சமூகஇயல்] உயர்தர படிப்பு மேற்கொள்ளுவதற்கான உபகாரச் சம்பளங்களை வழங்க முன்வந்திருக்கிறது சர்வகலாசாலைகளும் கல்வி நிலையங்களும் அனுப்புகிறவர்களும் அப்படி அனுப்பப்படாதவர்களும் விண்ணப்பம் செய்யலாம்,

கல்வி நிலையங்களால் அனுப்பப்படுகிற மாணவர்கள சம்பந்தப்பட்டதுறையில் எம் ஏ பட்டமுடையவராக இருக்கவேண்டும் அவர்கள் பட்டப்படிப்பு பட்டப் பிற்காலப் படிப்பு கட்டங்களில் இரண்டாவது வகுப்பாகத் தேறியிருக்கவேண்டும் அவர்கள் 35 வயதுக்கு மேற்படாதவர்களாக இருக்கவேண்டும் மற்றவர்கள் சம்பந்தப்பட்ட ஏதாவதொரு துறையில் எம் ஏ வகுப்பில் தேறியிருக்க வேண்டும் பட்டப்படிப்பு பட்டப் பிற்காலப் படிப்பு கட்டங்களில் முதலாவது வகுப்பாகத் தேறியிருக்கவேண்டும் அவர்களின் வயது 25 க்கும் மேற்படாமலிருக்க வேண்டும்.

அதற்கான விண்ணப்பநமூனாக்களையும் முழு விவரங்களையும் புதடில்லி ஆஜ்மீர் கேட் எக்ஸ்டென்ஷன் பகுதியிலுள்ள ஆசப் அலிரோடு மேத்தா மான்ஷனிலுள்ள யூனியன் கல்வி மந்திராலய உபகாரச் சம்பளங்கள் பிரிவு எஸ் 1-க்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்,

அந்த மந்திராலயத்துக்கு விண்ணப்பங்கள் வந்துசேருவதற்கான கடைசி தேதி 1959 மார்ச் 20 ஆகும் கல்வி நிலையங்களால் அனுப்பப்படுகிற விண்ணப்பதாரர்கள் அந்தக் கல்வி நிலையங்கள் முதலியவைமூலமாக விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்,

நில உடைமைக்கு வரம்பு

என். ஜி ரங்கா ஆதரிப்பு

பெல்காம், மார்ச் 3....

"பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கும் சர்க்கார் ஊழியர்கள், மற்றவர்கள் வாங்கும் பெருந்தொகைகளுக்கு உறுதியாக வரம்பு நிர்ணயிக்கப்படுவதாயின், நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டுவதை நான் எதிர்க்கமாட்டேன்" என்று பேராசிரியர் என். ஜி. ரங்கா மைசூர் விவசாயிகள் கூட்டத்தில் பேசுகையில் நேற்று கூறினார்,

உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு கூட்டுறவுப் பண்ணைமுறைதான் ஏற்றது

க்ஷயரோக சிகிச்சையில் நர்சுகளுக்குப் பயிற்சி

கொழும்புத்திட்டத்தின்கீழ் ஏற்பாடு

புதடில்லி பிப் 27—

கொழும்புத் திட்டத்தின்கீழ் ஆஸ்திரேலியாவில் க்ஷயரோக சிகிச்சையில் நர்சுகளுக்குப்பயிற்சி அளிப்பதற்காக யூனியன்சுகாதார மந்திராலயம் அந்தப் பயிற்சிபெற விரும்புகிறவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியிருக்கிறது இந்தப் பயிற்சி வசதிகள் நடைமுறைப் பயிற்சி பெறுவதற்கான வசதிகள்தானே தவிர வெறும் போதனை ரீதியான பயிற்சி வசதியல்ல விண்ணப்பதாரர்கள் 45 வயதுக்குஉட்பட்டவர்களாக இருக்கவேண்டும் தகுந்த காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் விசேஷசந்தர்ப்பங்களில் இந்த வயது வரம்பு 48 வயதுவரை தளர்த்தப்படும். அவர்கள மத்தியசர்க்கார் அல்லது ராஜ்யசர்க்கார் ஸ்தல ஸ்தாபனங்கள் அல்லது சர்க்கார் சார்பற்ற சுயேச்சை ஸ்தாபனங்களின் கீழ் வேலைக்கமர்ந்துள்ளவர்களாக இருக்கவேண்டும் கௌரவஊழியர்கள் விஷயத்தில் சம்பந்தப்பட்ட ராஜ்யசர்க்கார முறையானதும் முழுநேரமுள்ளதுமான உத்யோகம் வழங்க உத்தரவாதம் அளிக்கிற கௌரவஊழியர்களின் மனுக்கள்மட்டுமே கவனிக்கப்படும்.

எல்லா விஷயங்களிலும் விண்ணப்பங்கள் ராஜ்யசர்க்கார்களின் மூலமாக அனுப்பவேண்டும் யூனியன் சர்க்கார் சிப்பந்திகள் தங்களுடைய விண்ணப்பங்களை தங்களுடைய மந்திராலயங்களின் மூலமாக அல்லது இலாகாக்களின்மூலமாக அனுப்பிவைக்கவேண்டும், இதற்கான விண்ணப்ப நமூனாக்களை சுகாதார மந்திராலயத்திலிருந்துபெற்றுக்கொள்ளலாம் விண்ணப்பங்களை ராஜ்ய சர்க்காரகளுக்கு அளிக்கவேண்டிய கடைசி தேதி 1959 மார்ச் 10ம் இந்தியசர்க்காருக்குச் சமர்ப்பிக்கவேண்டிய கடைசி தேதி 1959 மார்ச் 31ம் ஆகும்,

சோவியத் நல்லெண்ணத் தூதுக்குழு

சென்னை வருகை

சென்னை, மார். 3...

சோவியத் நல்லெண்ண தூதுகோஷ்டி ஒன்று 1959 மார்ச் 5 வியாழக்கிழமையன்று மாலை 3 மணிக்கு சென்னை வந்து சேரும் மாலை 6-30க்கு புதுப்பேட்டை ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் அவர்களுக்கு சென்னை மக்களின் வரவேற்பு உபசாரம் நடைபெறும். மார்ச் 6ஆம் நாள் காலை 8 30 மணிக்கு அக்குழுவினர் மதுரை புறப்படுவார்கள்,

கூட்டுறவு விவசாயமுறையில் சொத்துரிமை போய்விடாது

பிரதமர் நேருவின் அறிவுறுத்தல்

லட்சுமணபுரி, மார். 2—

வறுமையைப் போக்கவும், அபிவிருத்தியடையாத நாடு என்ற நிலையைப் போக்கவும் பொருள் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று பிரதமர் நேரு நேற்று கேட்டுக் கொண்டார், இந்த விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. நேரு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

உற்பத்தியைப் பெருக்க என்னும்போது, நிலப் பிரச்னை, விவசாயப் பிரச்னை போன்றவைகளைக் குறித்து சிந்திக்க வேண்டியிருக்கிறது. நம் அடிப்படை பிரச்னையே விவசாய உற்பத்தியைப் பெருக்குவதுதான் என்றார்.

விவசாய உற்பத்தி தானிய அளவு இரட்டிப்பு ஆனால்தான் உள்நாட்டுத் தேவையும் பூர்த்தியாவதுடன், இதர அபிவிருத்திகளுக்கு வேண்டிய பணமும் பெற முடியும் என்றார் நாம் நமது உற்பத்தியை பெருக்கவேண்டுமானால், விவசாயிகள்...துடியானவர்கள் கூட்டுறவு தத்துவத்தை உணரவேண்டுமென்றார்.

கூட்டுறவு என்றால், கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடன்பெறுவதென்பதல்ல, வயல்களில் கூட்டாகச் சேர்ந்து வேலை செய்வதாகும் என்றார்.

விவசாயிகளைப் பழைய சம்பிரதாயங்களிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்

கூட்டுறவு பண்ணை முறையினால், நிலச்சுவான்தார்களின் சொத்துரிமை போய்விடாதென்றும், அவர்கள் நிலங்கள் பறிக்கப்படமாட்டாதென்றும் திரு. நேரு கூறினார்.

மக்களின் ஒப்புதலின் மீதே கூட்டுறவு ஏற்படும் என்றும், கூட்டுப் பண்ணையின் இலட்சியமே, கூட்டாகச் சேர்ந்து விவசாயம் செய்வதென்றும் இவ்வொத்துழைப்பு இல்லையென்றால் உற்பத்தி பெருகாதென்றும் பிரதமர் கூறினார்.

கூட்டுப்பண்ணை முறையைப் பற்றி குறை கூறுகிறவர்கள், இதன் உண்மையைப் புரிந்து கொள்வதில்லையென்றார்.

நிர்ணயவிலைக்கு விற்க மறுத்தால் 'கட்டாய'க் கொள்முதல்

சென்னை அரசாங்கம் ஆலோசனை

சென்னை, மார். 3...

அரசாங்கத்தின் நிர்ணய விலைக்கு மிராசுதார்களோ மில்காரர்களோ நெல், அரிசி விற்க மறுப்பார்களேயானால், அவர்களிடமுள்ள அரிசி, நெல் இருப்பைக் கட்டாயக் கொள்முதல் செய்வது குறித்து சென்னை அரசாங்கம் ஆலோசனை செய்துவருவதாக நேற்று மேல் சபையில் விவசாயத் துறையமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் கேள்வி நேரத்தில் அறிவித்தார்.

வேறு கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அய்ந்து ஆண்டுகளுக்கு முன் கிடைத்த தகவல்களிலிருந்து அரசாங்கம் கொள்முதல் செய்ய வேண்டிய 2 லட்சம் டன்களுக்கு 6.00 டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்று அறிவித்தார். சரக்கு கொள்முதல் அளவைப்பற்றி சர்க்கார் அதிக கவலை கொள்ளவில்லையென்றும், நிர்ணய விலையை அமுல்படுத்துவதுதான் நோக்கம் என்றும் அமைச்சர் அறிவித்தார்.

நெய்வேலித்திட்டம்

அடுத்த ஆண்டுக்கு ரூ 13 கோடி!

புதுடில்லி. மார்ச், 2—

நெய்வேலித் திட்டம் பற்றி சோவியத் நிபுணர்கள் அளித்த திட்ட அறிக்கையை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது

இத்திட்டத்துக்கு அடுத்தஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 13 கோடி ஒதுக்கப்படும் என்று நிதியமைச்சர் நேற்று அறிவித்தார்.

தெர்மல் ஸ்டேஷன் அமைப்பதற்கு தேவையான இயந்திரங்கள் இதர நுணுக்கக்கருவிகள் சப்ளை செய்வது குறித்து ஒரு உடன்பாடு செய்துகொள்ள இந்திய அரசாங்கத்துக்குமிடையில் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கின்றன என்று அறிவிக்கப்படுகிறது முதல் நிலையத்தின் முதல் யூனிட் 1961 மார்ச் மாதம் வேலை செய்யத் தொடங்கும் 1963ம் ஆண்டு மத்தியில் மின்விசை உற்பத்தி முழுவதும் சாத்தியமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

விடுதலை
திராவிடர் தமிழ்த் தினசரி
3-3-59 செவ்வாய்

தமிழ்நாடு ஆட்சி பட்ஜெட்

...நாடு ஆட்சியின் பு... வரவு-செலவுத் திட்ட... 73 கோடி ரூபாய் வரவு கிடைக்குமென்றும் 71 ... 69 லட்ச ரூபாய் ... ஏற்படுமென்றும் ஒரு ... 39 லட்ச ரூபாய் மிச்சமென்றும் எதிர்பார்க்கப்படு... புதிய ஆண்டில் புதுவரியும் கிடையாதென்று கூறப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் உபரி பட்ஜெட் ...க்கப்பட வேண்டுமென்று ... ஆட்சியின் உத்தரவு ...தாலொழிய இம்மாதிரித ...ரிக்கப்பட்டிருக்காது என் ...மக்குத் தெரியும். ...ண்டு ...ம் பட்ஜெட்டைத் தயார் ...தால் இந்திய ஆட்சியிட ...ந்து பணம் கேட்கவேண்டி ...க்கும்; உபரி பட்ஜெட்டா ...தால் மத்திய ஆட்சிகத எவ் ...ப் பணப்பொறுப்புமிருக் ... இதுதான் உபரி பட்ஜெட் ... இரகசியம், மத்திய ஆட்சி ...ல் இந்த மாநிலத்திலிருந்து ...ன்ஸைப் புறத்தால் கொண்டு ...கப்படும் வரிப்பணம் முழுவ ...யும் தராவிட்டாலும் முக்கால் ...ையைக் கொடுத்தாலுங்கூட ...நாட்டில் "விற்பனை வரி" ...று கூறப்படும் வாங்குவோர் இல்லாமலே ஆட்சி நடத்த ...யும். வடகோடியிலிருக் ...ற காஷ்மீரைப்பாதுகாப்பதற் ...க்கோட்டியழுகின்றஇராணு ...செலவும்வடநாட்டுத் தொழிற் ...லைகளுக்காக வாரி இறைக ...ற தண்டச்செலவும் இல்லா ...ல். தமிழ்நாட்டின் வரிகள் ...வளவு உயர்ந்திருக்க மாட் ... வாழ்க்கைச் செலவும் ...ர்ந்திருக்காது. காஷ் ... எந்த நாட்டானிடமிருந்தால் ...நாட்டுக்கென்ன? பாகிஸ் ...டமிருந்தாலுஞ் சரி, இந்துஸ் ...டமிருந்தாலுஞ்சரி ரஷ்யாக் ...னிடம் போனாலுஞ்சரி, தமி ...க்கு எந்தவகையில் கேடு ...டும் என்று கேட்கிறோம்,

...கையால் "எதிர்பார்த்ததை ... மத்திய ஆட்சி வரிகளில், ...நாடு ஆட்சியின் பங்குத் ...கை மிகுதியாக இருக்கக் ...ம்" என்று எதிர்பார்ப்பதாக மாநில நிதியமைச்சர் அவர் ... கூறியிருப்பதைக் கண்டு ... மகிழ்ச்சியடையமுடியாது. ...வீட்டுப் பணத்தை ஆயிரக் ...க்கில் கொள்ளையடித்துக் ...ண்டு போகிறவனிடம் நாம் ...லைக் காட்டிக் கெஞ்சி ...டனா பிச்சை கேட்டு ...க்குவது பெருமைக்குரியதா? ...டனைத் தடுத்து நிறுத்தி ...ட்டியடிக்கும் துணிவில்லை ...பதை ஒப்புக்கொள்ளத் ...ன வேண்டும்? வீட்டுக்கார ...க்கு இந்த ஆண்மையில்லாத ...து அக்கம்பக்கத்திலுள்ளவர் ...னே இப்பொறுப்பை ...க்கொள்ள வேண்டும்? ...த்தான் திராவிடர்கழகம் ...து வருகிறது, டில்லி ஆட்சி ...டிப்பறித்துச்செல்லும்பெருஞ் ...வத்தைப்பாதுகாக்க வேண்டு ...ன்பதற்காகவேதனிச் சுதந்தரத ...நாடு வேண்டும் என்றுகேட் ... திராவிடர்கழகம்,

...னி, தமிழ்நாடு கல்வி, ...பாசனம், மின்சார வளர்ச்சி, இயந்திரத்தொழில்... ஆகிய ...றைகளில் மற்றமாநிலங்களைக் ...டியும் முன்னேறியிருப்ப...

மை ... மற்ற மாநில மந்திரிசபைகளை விடதம் மந்திரிசபை இத்துறைகளில் தனிக் கவனஞ் செலுத்தி வருவது பாராட்டதற்குரியது.

நீர்ப்பாசனத் துறையில் இனிப் புதிய பெரிய திட்டம் எதுவும் பரம்பிக்குளம் திட்டம் தவிர, வகுப்பதற்கு வசதியில்லை. கிருஷ்ணா... கோதாவரி ஆறுகளின் உபரி நீரை இங்குகொண்டு வருவதற்கான மாபெரும் திட்டம் ஒன்றுதான் இருக்கிறது. இதை டில்லி ஆட்சிதான் நிறைவேற்ற வேண்டும். ஏனெனில், இதற்குப் பல கோடி ரூபாய் செலவாகுமாதலால் உடனடியாக மாநில ஆட்சியாளர் எதுவும் செய்யக்கூடாத நிலையிலிருக்கின்றனர்.

குந்தா மின்சார உற்பத்தித் திட்டம் அடுத்த ஆண்டில் முடிந்துவிடக் கூடுமாதலால் விரைவில் தாராளமான மின்சார சக்தி கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஆண்டிம் மேலும் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார சக்தி தரப்படுமென்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அடுத்த 4-5 ஆண்டுகளிலவது நெய்வேலி மின்சார சக்தி உற்பத்தியும் உருவாகுமாறு மாநில ஆட்சியாளர் டில்லி ஆட்சியைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் மக்கள் எண்ணிக்கை ஏராளம். உணவுப் பொருள் தட்டுப்பாடும் எரிபொருள் (Fuel) தட்டுப்பாடும் வளர்ந்து கொண்டுதானிருக்கும் ஆதலால் மின்சாரத்தைப் பயன்படுத்தி வரட்டி, விறகு, கரி போன்ற எரிபொருள்களை மிச்சப்படுத்த வேண்டும். உணவுப் பொருள் உற்பத்திக்கும் மின்சாரத்தைப் பயன்படுத்தவேண்டும். நாள்தோறும் பதினாயிரக் கணக்கான செடிகளும், மரங்களும் தமிழ்நாட்டில் விறகுக்காக வெட்டி வீழ்த்தப்படுகின்றன என்பதை ஆட்சியாளர் மறந்துவிடக்கூடாது. புளியின் விலையும், பலகை, சட்டம் முதலிய கட்டடச்சாமான்கள் விலையும் ஏறிக்கொண்டே போவதற்கு இதுவும் ஒரு முக்கியமான காரணமாகும், ஆட்சியாளர் இத்துறையை அலட்சியப்படுத்தினால் தமிழ்நாடு வெகுவிரைவில் பாலைவனம் (ராஜஸ்தானம்) போல்வறண்டு காட்சியளிக்கும் என்று எச்சரிக்கின்றோம்.

இனி, இந்தப் புது ஆண்டில் ஆறுகோடி ரூபாய கடனாக எழுப்பப்போவதாகக் கூறப்பட்டுள்ளதைப் பற்றிய ஒரு வார்த்தை. பெரிய புதிய-திட்டங்களுக்கான செலவுக்காகப் பணவசதி பெற்றவர்களிடமிருந்து ஆட்சியாளர் வட்டிக்குக் கடன் வாங்குவது என்பது பல நாடுகளிலுமுள்ள பழக்கந்தான். ஆனால் இக்கடனை பெரிய பாங்குகள், பெரிய தொழிற்சாலைகள், லட்சாதிபதி முதலாளிகள்... ஆகியோரிடமிருந்து பெற வேண்டுமே தவிர, மற்றவர்களிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பெறக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறோம். தேசிய சேமிப்புப் பத்திரங்கள் விற்பதிலும் வலுக்கட்டாய முறை கையாளப் ...

...லிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. உயர்தர அதிகாரிகள் நடுத்தர மிராசுதார்களையும் வியாபாரிகளையும்மிரட்டி சேமிப்புப்பத்திரங்களை விற்று வருகிறார்கள். விரைவில் அந்தந்த அதிகாரியின் பெயரைக்கூட வெளியிட வேண்டியிருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறோம். மலரைக் கசக்கி முகர்ந்து பார்ப்பது அறிவுடைமையல்ல என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

கடன் பத்திரமாயினுஞ் சரி, சேமிப்புப் பத்திரமாயினுஞ் சரி, பணம் பெருத்தவரிடமும், பணம் பெருத்த அமைப்புக்களிடமிருந்தும் பணம் பெற்று விற்பதுதான் முறையாகும்—நீதியாகும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் நாடு ஆட்சியைப் பற்றிக் கூறப்படுகின்ற இரண்டொரு பெரிய குற்றங்களில் இதுவும் ஒன்றாக இருப்பதனால்தான் இதை நமது திறமை மிக்க அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியது நமது கடமையென்று கருதுகிறோம்.

மற்றப்படி இப்புது ஆண்டு பட்ஜெட்டில் முக்கியமான பல முற்போக்குத் துறைகள் காணப்படுவதுபற்றி இம்மந்திரிசபையையும், சிறப்பாகத் தகுதிமிக்க நிதியமைச்சரையும் பாராட்டுகிறோம்,

---

பெரியார் அறிக்கை

நான் திராவிடர் கழகங்கள் சிலவற்றை அதாவது மத்திய திராவிடர் கழகத்தின் கிளைக்கழகங்களான 12 மாவட்ட கழகங்களில் ஒரே ஒரு கழகமாகிய சென்னை மாவட்ட கழகத்தையும், ஆயிரக்கணக்கான நகர-கிராமப் பகுதி கழகங்களில் அய்ந்தே அய்ந்து கிளைக்கழகங்களையும் மாத்திரம் அவைகள் செயல்படுவதைத் தடுக்கும் தன்மையில் கலைத்து விட்டதாக அறிக்கைவிட்டு இருக்கிறேன்,

அவ்வறிக்கை விட்டதன் காரணங்களையும், அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். அவ்வறிக்கையில் சில கருத்துக்களைத் தற்காலிகமாக என்றும் குறிப்பிட்டிருந்தேன். இந்த அறிக்கையானது குறிப்பிட்ட கழகங்கள் செயல்படுவதை அதாவது அக்கழகங்கள் பெயரால் கழகத் தொண்டு செய்வதைத்தான். அதுவும் தற்காலிகமாகத் தடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, மற்றபடி மற்ற மாவட்ட, வட்ட, நகர, கிராமப்பகுதி முதலிய கழகங்கள் கழகப் பணி செய்வதைத் தடுத்ததாகப் பொருள்கொள்ளும்படி விடப்பட்டிருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே வழமைபோல் ஆங்காங்கு பொதுக் கூட்டங்கள் நடத்தப்படுவதற்கும் மற்றக் காரியங்களைச் செய்வதற்கும், மற்ற மாவட்ட கழகத்தாருக்கும் கிளைக்கழகத்தாருக்கும் உரிமை உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

கலைக்கப்பட்ட இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்த மக்கள் விரும்பினால் அவ்வக்கழகத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகத் தலைவர் அல்லது செயலாளர் மூலம் நடத்த ஏற்பாடு செய்யலாம். மாவட்டக்கழகம் கலைக்கப்பட்ட இடத்தில் உள்ள கிளைக்கழகம் கலைக்கப்பட்டிருந்தால் தலைமைக் கழகத் தலைவருக்கு நேரில் எழுதி ஏற்பாடு செய்யச்செய்யலாம்.

இந்த அறிக்கை ஏன் விடப்படுகிறதென்றால், என் அறிக்கையை சிலஇடத்தாரக்கட்சிக்காரர்களும், பத்திரிகைக்காரர்களும், பார்ப்பனர்களும், தனிப்பட்டவர்களும் தங்கள் விஷமப் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்கு ஆகவேயாகும்.

(கையொப்பம்)

3-3-59

தபால்-தந்தி இலாகா ஊழியர்கள்

நேற்று சம்பளம் வாங்கவில்லை

சென்னை மார்ச் 3...

தபால்-தந்தி இலாகா சென்னை சர்க்கிள் இணைப்புக் கமிட்டி கன்வீனர் திரு ஏ பிரமநாதன் எழுதுவதாவது:

தபால்... தந்தி சிப்பந்திகளின் தேசிய சங்கத்தின் கோரிக்கைக்கிணங்க சென்னை நகரிலும், சென்னை சர்க்கிலுள்ள எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள தபால் தந்தி ஊழியர்கள் நேற்று சம்பளம் வாங்காக்கிளர்ச்சி செய்தனர். நேற்றுமாலை கிடைத்த தகவலின்படி 99 சதவிகித தபால்-தந்தி ஊழியர்கள சம்பளம் வாங்கவில்லையெனத் தெரிகிறது.

நிலச்சீர் திருத்தத்திற்கு திரு. மசானி எதிர்ப்பு

உணவு உற்பத்தியைக் குறைக்குமாம

டெல்காம், மார்ச், 2...

நாகபுரி காங்கிரஸ் மாநாட்டு விவசாயசீர் திருத்தக்கொள்கையை அமுல் நடத்துவோமேயானால் அது உணவு உற்பத்தியைக் குறைக்கும் இதுமட்டுமின்றி வேலையின்மையையும் அதிகரிக்கச் செய்யும் கிராமங்களில் இனச்சச்சரவுகளை உண்டாக்கும் என்று திரு, எம். ஆர். மசானி எம். பி, நேற்று கர்நாடகமண்டல மாநாட்டை துவக்கிவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்,

மேல் சபையில் பட்ஜெட்

சென்னை, மார்ச், 3...

சென்னை அரசாங்கத்தின் 1959-60ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் நேற்று மேல் சபையில் அமைச்சர் திரு. வெங்கட...

பாக். துருப்புக்களின் அத்துமீறிய செயல

கரீம்கஞ்ச் மார்ச் 3...

இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் படைகள் அத்துமீறி நுழைந்து பலாத்காரமாகப் பிடித்துக் கொண்ட டக்கர் கிராமம் என்ற கிராமத்தைச்சுற்றி பாகிஸ்தான் துருப்புகள் மதில்சுவர் எழுப்பிவிட்டிருக்கின்றனர் என்று அந்த இடத்தைப்பார்வையிட்டுவிட்டுவந்த அதிகாரிகள் கூறுகிறார்கள் இந்த உயரமான மதில்கள்மீது மண்ணு மூப்பு பூசப்பட்டிருக்கிறது இக்கிராமத்தை அரணாக்கும்பணிமிக...

தமிழ்த் தலைவா வருக! வருக!!

(புலவர் கூத்தரசன்)

வைக்கத்தின் வீரரென வண்டமிழ்ப் போற்றும்
வையத்திற் கொரு தலைவர் வடநாடு சென்று
மெய்க்கருத்தை மிகவுணர்த்தி மேன்மை மிகப்பெற்று
மென்மையினைத் தமிழணங்கின் தன்மையினைச்
சொல்லி

...க்கின்ற ஆரியத்தை சாதியினை நன்றே
...நைப்பதற்கு வழிவகைகள் வேண்டுவகை கொ...
பொய்க்கருத்தைக் கடிந்துரைக்கும் புத்தர்நெறி
போற்றி

பூமாலை புகழ்மாலை சூடிவரக் கண்டோம்

பகுத்தறிவின பெருந்தலைவர் வந்துற்ற செய்தி
பைந்தமிழர் இதயத்தில் மகிழ்ச்சியினை யூட்ட
வகுத்திருக்கும் அவர்பாதை நம்மவர்க்கு நல்ல
வழிகாட்டும் என்றெண்ணி வாழ்கின்ற மக்கள்
உகுத்திட்டோம் பகைப்புலத்தை ஆரியத்தை இன்றே!
உயர்வுற்றோம் அயர்வற்றோம் செயல் பெற்றோம்
இன்பம்

பகுத்திட்டோம் என்றனர்காண்! பெரியாரைப்
பார்க்கப்

புறந்தோடி விரைந்திட்டார் சிறந்திட்டார் அம்மா!

அய்யாவே! பெரியாரே! தமிழ்த்தலைவா! நாளும்
அருளோடு தாய்நாட்டின் இருளோட்ட வந்த
பொய்யாத விளக்கொளியே பொற்கதிரே உங்கள்
புதுமைநெறி அடியொற்றி வந்திடுவோம் எந்நாள்
கொய்யாத மலர்போன்று மணக்கின்ற எங்கள்
குளிர்தமிழே உங்களிடத்துப் புன்நகையால். இன்னும்
உய்யாத தமிழ்நாடு உய்யும்வகை கண்டோம்
உகைநிறந்த தமிழ்த்தலைவா வருக! வென்று
சொன்னோம்

பம்பாய்
உண்மை நாடுவோர் சங்கத்தினர்க்கு தந்தை பெரியாரின் கொள்கை விளக்கம்

அய்ய வினாவும் பெரியார் தந்தவிடையும்

பம்பாய் பிப் 24—

பம்பாயில் பகுத்தறிவுப் பிரசாரத்தையே தங்களது முக்கிய லட்சியமாகக்கொண்ட சத்திய சோதக் சமாஜ் என்னும் உண்மைநாடுவோர்சங்கத்தின அமைப்பாளர்களான திரு விச்சாரே பி ஏ அவர்களும் அவரது துணைவியார் திரு கமல்விச்சாரே எம், ஏ. அவர்களும் தந்தை பெரியார் அவர்கள் தங்கியிருந்த தோழர் பி ஜான்முத்தையா அவர்களது இல்லத்தில் வந்து கண்டு பேசி தந்தை பெரியார் அவர்களுடன் பல விஷயங்கள் குறித்து விளக்கம் கேட்டுத் தெரிந்தனர்.

அப்போது அவர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு தந்தை பெரியார் அளித்த பதில்வருமாறு

கேள்வி:—100க்கு 3 பேர் தானே பார்ப்பனர்கள் இருக்கிறார்கள்? நாம் 97 பேர் இருக்கிறோம், அப்படி இருக்கும் எப்படி இவ்வளவு நாட்களாக நம்மை அடக்கி ஒடுக்கி ஆள அவர்களால் முடிகிறது? இது ஒரு பெரிய அதிசயமாக இருக்கிறதே!

பதில்;—இதில் ஒன்றும் அதிசயம் இல்லையே! ஒரு பெரிய கூட்டத்தில் 3 போலீஸ்காரன் கையில் 3 துப்பாக்கியிருக்கிறது என்றால் அதை வைத்துக் கொண்டு ஆயிரக்கணக்கான மக்களை அவன் கலைந்து ஓடும்படிச் செய்துவிட முடியாதா? அதுபோலத்தான பார்ப்பனர்கள் கையில் மதம், கடவுள் சாஸ்திரம், பத்திரிகைகள்... நம்பிக்கைப் பழக்க வழக்கங்கள், பண்டிகைகள் பலமான அரசாங்கம் போன்ற பல துப்பாக்கிகள் உள்ளன, நமக்கு அந்த வசதிகள் எதுவுமே இல்லை, அதனால் சுலபமாக அவர்கள் தங்கள் இஷ்டம் போல் நம்மை ஆளுகிறார்கள் பல காக்கைகள் இருந்தால் ஒரு கல் எறியப்பட்டால் அவை பறந்துவிடாதா? அதுபோலத்தான் என்றார்கள்.

வந்த இருவரும் இந்த விளக்கம் கேட்டு மகிழ்ச்சிப் பெருக்கால் கைதட்டினார்கள்,

இராமாயணத்தைப் பற்றிய புதிய ஒளி நூல் அன்பளிப்பு

தந்தை பெரியார் அவர்கள் இராமாயணத்தின் உண்மைத் தன்மைகளை எடுத்து விளக்குவதுபோலவே மராத்தியிலும் புதிய கண்ணோட்டத்தோடு இராமாயணத்தின் உண்மைத் தோற்றம் காட்டப்பட்டிருக்கிறது என்றும் அதற்கு "இராமாயணத்தைப் பற்றிய புதிய ஒளி என்ற தலைப்பில் திரு பி வி ஜாதவ் என்பவரால் மராத்தியில் எழுதப்பட்டுள்ளது என்றும் அவர் பம்பாய் மாநிலத்தின் முன்னாள் கல்வி மந்திரியாக இருந்தவர் எனவும் கூறி அந்த இராமாயணப் பிரதி ஒன்றை அன்பளிப்பாகத் தந்தார், தந்தை பெரியார் அவர்கள் நன்றியுடன் பெற்றுக்கொண்...